1968 ஆகஸ்ட் 22]

இடங்களிலும் போட்டிருக்கிறது என்று கனம் உறுப்பினர் அவர்கள் கூறியிருக்கும் பேச்சில் இருந்தே தேர்தலுக்காகப் போடவில்லை என்பதைப் பொதுமக்கள் உணர்ந்து கொள்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. விநயகம் அவர்கள் 83-வது கேள்வியில் உள்ள 'ஜட்ஜ்மென்ட்' என்ற சொல் பிழையானதாக இருக்கிறது என்ற பிரச்சினையை எழுப்பினார்கள். ஆக்ஸ்போர்டு டிக்ஷனரி பிரகாரம் அந்தச் சொல்லிலே எழுத்துப் பிழை இல்லை. ஆகவே, அவ்வாறு எழுதுவதும் ஒரு முறை என்ற வகையில் அவ்வாறு எழுதலாம். இரு வகையாகவும் எழுதலாம்.

THIRU K. VINAYAKAM : Englishman speaks English in one way and American speaks English in another way. The correct spelling is " Judgment ".

2. நடைமுறைக் கேள்வி.

ஒத்திவைக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளித்தல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேற்று திரு. மெய்யப்பன் அவர்கள் கேள்விகளை வரிசைப்படுத்துவதைப் பற்றி ஒரு ஒழுங்கு முறையை எழுப்பினார்கள். அதற்கு நான் இன்று பதில் அளிக்கிறேன் என்று சொன்னேன்.

நம்முடைய பேரவை விதிகளில் 35-வது விதியில்—

Starred questions endered in the list of questions for a day shall be called, if the time made available for questions permits, in the order in which they stand in the list.

என்று இருக்கிறது.

இருந்தாலும் 37-வது விதியில்—

Subject to the rules, questions shall be put and answers given in such manner as the Speaker may, in his discretion, determine.

என்று இருக்கிறது.

அடுத்து விதி 35, பிரிவு (5)-ல்—

The Speaker may, t rhe request of the concerned Minister postpone one or more questiona entered in the list of questions for a day to a subsequent date.

என்று கூறப்பட்டிருக்கிறது.

மறு நாளைக்கு ஒத்தி வைக்கலாம் என்றும், வேறு நேரத்திற்கு ஒத்தி வைக்கலாம் என்றும் இருக்கிறது. இதனால் உறுப்பினருக்கு சந்தர்ப்பம் கிடைக்குமா என்ற எண்ணம் எழலாம். அதற்காக உள் விதி 3-ல்—

'When all the questions for which an oral answer is desired have been called the Speaker may, if time permits, call again any question which has not been asked by reason of the absence of the member in whos nam eit stands, and may permit the member, if present, to ask the question '.

என்று கூறப்பட்டிருக்கிறது.

அந்த உறுப்பினர் வராது போவதால் வாய்ப்பு இல்லாது போய்விடும் என்ற நிலையை ஒட்டி, பிறகு ஒரு முறை அந்தக் கேள்வியைக் கேட்டு, வாய்ப்பளிக்க இடம் இருக்கிறது. ஆகவே, இந்த முறையை அனுசரிப்பதிலே தவறோ, எந்த விதமான முறை கேடோ இல்லை.

திரு. சா. மெய்யப்பன் : தலைவர் அவர்களே. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு ஒழுங்குப் பிரச்சினை மீது சபாநாயகர் தீர்ப்பளித்த பிறகு, தீர்ப்புக்கு எதிராகப் பேசுவது மன்றத்தின் மரபாகாது. இந்தத் தீர்ப்பிலே உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோள் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. எந்த விதமான முறைகேடும் இல்லை.

DR H. V. HANDE : Sir, will it not be in order if this House stands up in silence for a minute expressing our grief at the rape of democracy in Czechoslovakia wherein Warsaw Pact countries' troops ... ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் இந்த மன்றத்திலே எதைப் பற்றிப் பேசவேண்டுமென்று சொன்னாலும் தலைவருடைய அனுமதியை முதலில் பெற்றுக் கொண்டுதான் பேசவேண்டும். தலைவர் அனுமதியைப் பெறாமல் தாங்களாகவே எழுந்து பேசுவது சபையின் விதிமுறைகளுக்கு உகந்ததல்ல. ஆகவே, தங்களுக்கு அனுமதி மறுக்கிறேன்.

DR. H. V. HANDE : I have taken permission of the House. I am raising a point of order.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தீர்ப்பளித்த பிறகு தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும்.

DR. H. V.HANDE : I am raising a point of order . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல. இதைப் பற்றி மூன்று ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டு இவை இந்த மன்றத்தின் விதி முறைகளுக்கு ஒத்து வாராத காரணத்தால் என்னுடைய அறையிலேயே மறுத்திருக்கிறேன். அதைப் பற்றி இந்த மன்றத்தில் எழுப்புவது

1968 ஆகஸ்ட் 22] [பேரவைத் துணைத் தலைவர்]

என்றால் சபாநாயகர் அனுமதி பெற்றுத்தான் எழுப்ப வேண்டும். அனுமதி மறுக்கப்பட்ட பின்னரும் உறுப்பினர் அவர்கள் எழுந்து பேசுவது முறையாகாது.

DR. H. V. HANDE : I am not raising an adjournment motion. You have allowed the hon. Member Thiru K. Vinayakam to get up and speak about the business of the House. I want to know......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதைப் பற்றி எழுப்புவதாக இருந்தால் தலைவர் அனுமதி பெற்றுத்தான் எழுப்ப வேண்டும். தலைவர் அனுமதி பெறாமல் எழுப்புவது முறையானது அல்ல.

DR. H. V. HANDE : I want to know the views of the Hon. Chief Minister ... ...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது வேறு. விளக்கங்கள் பெறுவது என்ற முறையில் அல்ல தாங்கள் இப்போது எழுப்புகின்ற பிரச்சனை.

DR. H. V. HANDE : I am only requesting, Sir, whether it will be possible for the Hon. Chief Minister to give his views.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டரைப் பற்றித் தீர்ப்புச் சொல்லுகின்ற அதிகாரம், அவை நடவடிக்கைகளைப் பற்றி செய்யவேண்டிய அதிகாரம் தலைவருக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது, அமைச்சரைக் கேட்கக் கூடாது.

DR. H. V. HANDE : I am just asking the Hon. Chief Minister to give his views on the subject.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த ஒரு பொருளைப் பற்றி விவாதிக்க தலைவருடைய அனுமதி பெற வேண்டுமென்று சொல்லுகிறேன். விதிமுறைகள் இருக்கின்றன. விதிமுறைகளுக்கு மாறாக பிரச்சினைகளை எழுப்ப முடியாது.

3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

மத்திய ஊதிய வாரியத்தின் பரிந்துரைகளையும் தோட்டத் தொழிலாளர் சட்டத்தையும் கன்னியாகுமரி ரப்பர் தோட்ட முதலாளிகள் நிறைவேற்றாதது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து திரு. ஜேம்ஸ் அவர்கள் கீழ்க்கண்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள் :—

" That the non-implementation of the recommendation of the Central Wage Board for the Rubber Industry and the Plantation Labour Act by the management of the Kanyakumari Rubber Plantations and the strike notice issued by about 2,000 labourers to strike work from 2nd September 1968.